பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஹு மாசி மீ 02 உ. வியாழக்கிழமை (14-02-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 79

# கிழக்கில் அதிரடி தாக்குதல்கள்

# 5 படையினர், 5 பொலீஸார் பலி

## இன்ஸ்பெக்டர் ஒருவரும் உயிரிழப்பு

கொழும்பு, பெப்ரவரி 14

கிழக்கில் மணல் ஆறுப் பகுதியிலும் அம்பாறை மாவட்டத்திலும் விடுதலைப் புலிகள் நடத்திய இருவேறு அதிரடித் தாக்குதல் சம்பவங்களில் ஐந்து இராணுவத்தினரும், பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட ஐந்து பொலீஸாரும் உயிரிழந்தனர்.

கொழும்பில் பாதுகாப்புப் படை வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

அம்பாறையில்

அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் உகணைப் பொலீஸ் நிலையத்திலிருந்து வெளியேறி பக்கியெல்ல பொலீஸ் நிலையம் நோக்கி சென்று கொண்டிருந்த பொலீஸாரின் வாகனத்தை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கினர்.

அம்பாறை - மகாஓயா வீதியில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு சீன ஆயுதம்; இந்தியா கடும் ஆட்சேபம்

பீகிங், பெப்: 14

இலங்கைக்கு சீன ஆயுதங்கள் விற்பது குறித்து பீகிங்கில் உள்ள இந்தியத் தூதர் சீன அரச அதிகாரிகளிடம் கடும் ஆட்சேபம் தெரிவித்தார்.

இந்திய அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்ட இந்த ஆட்சேபனையை சீன அரசு நிராகரித்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவுடன் யுத்தம் நடத்துவதற்காக இலங்கை சீனாவிடம் இருந்து ஆயுதங்களை வாங்கவில்லை என்றும்—

உள்நாட்டு யுத்தத்தில் பயன்படுத்தவே இலங்கை ஆயுதங்களை வாங்குவதாகவும் சீன அரச அதிகாரிகள் இந்தியத் தூதரிடம் விளக்கினார் என்று செய்திகள் தெரிவித்தன. (ஏ-எ)

## பங்கருக்குள் பாய்ந்தது ஏவுகணை; ஆயிரம் பேர் வரை உடல் கருகிப் பலி!

லண்டன், பெப்: 14

ஈராக்கில் பொதுமக்கள் பாதுகாப்புக்காகத் தஞ்சம் புகுந்திருந்த பாதாள அறையின் நுழைவாசல் ஊடாக இரண்டு ஏவுகணைகள் உள்ளே புகுந்து வெடித்ததில் 400 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஆயிரம் வரை இருக்கும் என பி. பி. சி. தெரிவித்தது.

பன்னாட்டுப் போர் விமானங்கள் 28 ஆவது நாளாக நேற்று ஈராக் மீது கடும் விமானத் தாக்குதல்களை நடத்திய சமயம் இச் சம்பவம் இடம்பெற்றது.

தாக்குதலுக்கு இலக்கான பாதாள அறை 2 ஆயிரம் பேர் தங்கக்கூடியதாக அமைக்கப்பட்டிருந்தது.

பக்தாத்தில் உள்ள வெளிநாட்டுச் செய்தியாளர்களை ஈராக் அரசு அதிகாரிகள் அழைத்துச் சென்று சம்பவம் நடந்த இடத்தைக் காட்டினார்கள்.

கருகிய உடல்களை அகற்றும் வேலையை வெளிநாட்டுச் செய்தியாளர்கள் கண்டனர். (உ-எ)

## 40 ஜோர்தானியரும் பலி

லண்டன், பெப். 14

குவைத்தில் இருந்து பக்தாத் நகர் நோக்கி பொதுமக்கள் பயணம் செய்த வாகனம் ஒன்றின் மீது பன்னாட்டுப் போர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் சுமார் 40 பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

அந்த வாகனத்தில் தாக்குதல் நடத்தப்பட்ட சமயம் 60 பேர் இருந்தனர். உயிரிழந்தவர்கள் ஜோர்தான் பிரசைகள் ஆவர். (ஒ-எ)

## முச்சந்தி முரளி



...... [illegible] வந்து[illegible] போல......!

## பர்னாலா ராஜினாமா!

தமிழக ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலா நேற்று தனது ராஜினாமாவை ஜனாதிபதி வெங்கட்ராமனிடம் சமர்ப்பித்தார்.

திமுக அரசு கலைக்கப்பட்டது குறித்து திரு. பர்னாலாவுக்கும் மத்திய அரசுக்கும் இடையே கருத்து வேறுபாடு நிலவியதாகச் சொல்லப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பீஹார் மாநில ஆளுநர் பதவியை ஏற்கும்படி மத்திய அரசு விடுத்த அழைப்பை திரு பர்னாலா நிராகரித்து விட்டார்.

பர்னாலாவின் ராஜினாமாவை துணிகரமான நடவடிக்கை என்று தேசிய முன்னணி பாராட்டியுள்ளது.

இதேவேளை—

திரு. பர்னாலாவின் இடத்துக்கு - தமிழக ஆளுநராக திரு பீஷ்மன் நாராயணசிங் நியமிக்கப்பட்டார். (ஒ-எ)

## நெலுக்குளம் பகுதிக்கு சென்றது இராணுவம்

யாழ்ப்பாணம், பெப் 14

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவ அணி மன்னார் வீதியில் உள்ள நெலுக்குளத்துக்குச் சென்றிருப்பதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

சாஸ்திரிகூழாங்குளம் வீதியில் இருந்து ஒரு மைல் தொலைவில் உள்ள புதிய வீதி வழியாகவே அவர்கள் நெலுக்குளத்திற்குச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று வவு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் தொடர்ந்து மோதல்!

### மேஜர் ஜோன்ஸன் வீரமரணம்

யாழ்ப்பாணம், பெப். 14

முல்லைத்தீவு முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் நேற்றும் தொடர்ந்து மும்முனைத் தாக்குதல்கள் இடம்பெற்றன என்று அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

முகாமை விட்டு வெளியேற முயலும் படையினரைப் புலிகள் வழிமறித்துத் தாக்கி வருகின்றனர். படையினருக்கு உதவியாக விமானங்களிலிருந்தும், கடலில் தரித்து நிற்கும் பீரங்கிப் படகுகளில் இருந்தும் தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

நேற்று வற்றாப்பளை, 3 ஆம் வாய்க்கால், 6 ஆம் வாய்க்கால் பகுதிகளில் கடும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நீலாவணையில் 400 பேர் கைது!

நேற்று முன்தினம் சிவராத்திரி தினத்தன்று மட்டக்களப்பு மாவட்டம், கோட்டைக்கல்லாறில் இருந்து பயணம் செய்த 400 பொதுமக்களை நீலாவணையில் வைத்து படையினர் கைது செய்தனர்.

மட்டக்களப்புக்கு ஸ்ரீலங்கா ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச நாளை வருகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாகவே அப்பாவி பொதுமக்கள் கைது செய்யப்பட்டனர் என்று கூறப்படுகிறது. (ஒ)

## சிமெந்து ஊழியருக்கு ஜனவரி மாத சம்பளம்

### விரைவில் கிடைக்கும்

யாழ்ப்பாணம், பெப். 14

காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான ஜனவரி மாதச்சம்பளம் விரைவில் வழங்கப்பட இருக்கிறது.

கொழும்பில் தற்சமயம் தங்கியுள்ள கூட்டுத்தாபன அதிகாரிகள் யாழ்ப்பாணம் திரும்பியதும் சம்பளம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியாப்பகுதியில் போக்குவரத்து சீரானதும் திரும்பி வந்து சம்பளம் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய இருப்பதாக கூட்டுத்தாபன அதிகாரிகள் நேற்று கொழும்பில் இருந்து தகவல் தெரிவித்தனர். (ஒ-3)

## 5 ஆம் கட்ட நிவாரணம்; கூடுதலாக அரிசி; மா விலை குறைப்பு

நாளை முதல் அமுலுக்கு வரும் ஐந்தாம் கட்ட நிவாரணத்துக்கான உலர் உணவு நிவாரண விநியோகத்தில் முன்னரை விடக்கூடுதல் அரிசி வழங்கப்படவிருக்கிறது.

ஐந்தாம் கட்ட நிவாரணத்துக்கு உணவுப் பொருள்களின் அளவுகளில் சிறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அத்தோடு நிவாரணத்துக்கு வழங்கப்படும் மாவின் விலையும் குறைக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ மாவின் விலை 14ரூபா 25சதத்திலிருந்து 12ரூபா 25 சதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(புதிய நிவாரண அளவு விபர அட்டவணை 4 ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சாயி பாபாவின் அழகிய வர்ண ஸ்டிக்கர்ஸ் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. 266/1. ஸ்ரான்லி வீதியில் உள்ள சிறீ சாயிறாம் புத்தகசாலையில் தொடர்பு கொள்ளவும். (வின்னா ரியூசன் சென்ரர் அருகாமை) (15783)

வீட்டுச் சலவைக்குச் சிறந்த மிக மலிவான திரவ சவர்க்காரம் (Liquid Soap) விளக்கெரிக்கச் சுத்தமான வேப்பெண்ணெய் விற்பனையாகிறது. புலோலி ப. நோ. கூ. சங்கத்தில் மிக்க மலிவு. (இ/5759)

### விற்பனையாகிறது

வீட்டுச் சலவைக்குச் சிறந்த மிக மலிவான திரவ சவர்க்காரம் (Liquid Soap) விளக்கெரிக்கச் சுத்தமான வேப்பெண்ணெய் நீர்வேலி ப. நோ. கூ. சங்கத்திலும் விற்பனையாகிறது. மிக்க மலிவு. (இ/5763)

### பரிசு தரும் ''அக்கினி''

மீரா வெளியீடான செங்கை ஆழியானின் அக்கினி நாவலை வாங்கியவர்கள் இணைக்கப்பட்டிருக்கும் கூப்பனை நிரப்பி அனுப்புங்கள். குலுக்கலில் தெரிவு செய்யப்படும் முதல் பத்து வாசகர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 400/- ரூபா பெறுமதியான புத்தகங்கள் வழங்கப்படுகிறது. ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர். (15828)

### தேவை

Typeriteres தமிழ் - ஆங்கில பழைய புதிய தட்டச்சு இயந்திரங்கள் உடன் தேவை. Fudo: 39/17, மின்சார நிலைய வீதி 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (பஸ் நிலையம் முன்பாக). (இ/758)

சாவகச்சேரி துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கு உள் வேலை, வெளிவேலை செய்யக்கூடிய பல வேலைக்கு ஒருவர் தேவை. கோவில் வேலை அனுபவம் உள்ளவர் விரும்பத் தக்கது. வயது 25க்கும் 40க்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும். உடனடியாக நேரில் வரவும். தர்மகர்த்தா. (15816)

## WANTED

1. A medical officer with experience in obstetrics.
2. A registered midwife salary nego-tiable.

Please apply to:
Manager.
St. Lukes
Methodist Hospital,
Lockwood House,
Vembadi Road,
Jaffna.

## சங்கீதசபை பரீட்சை விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், பெப். 14 வட இலங்கை சங்கீதசபை பரீட்சைக்கான விண்ணப்பங்களை இம் மாதம் 18ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என சபையின் அலுவலகம் அறிவித்துள்ளது. (இ-8)

### போட்டோஸ்ரற்

போட்டோஸ்ரற் பிரதிகளையும், றோணியோ பிரதிகளையும் தமிழ், ஆங்கில ரைப்பிங் வேலைகளையும் உடனடியாகப் பெற்றுக்கொள்ள கிளிக்கட் 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (14608)

### ரைப்பிங் வகுப்புகள்

தமிழ்-ஆங்கிலம் ரைப்பிங் வகுப்புகள் நடைபெறுகின்றன. மற்றும் தமிழ்-ஆங்கிலம் ரைப்பிங் செய்துகொடுக்கப்படும். Fudo: 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். கிளை: பிரதான வீதி, மானிப்பாய். (C/5745)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 18 — 06 — 1925

மறைவு: 25 — 02 — 1990

### அமரர் வேலுப்பிள்ளை அமிர்தலிங்கம்

எங்கள் அன்புத் தந்தையே! எம்மைவிட்டு நீங்கள் சென்று ஓராண்டு ஆகின்றது. உங்கள் நினைவுகள் எங்களை விட்டு பிரியவில்லை.

அன்புள்ள,
பிள்ளைகள்

24, வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (15812)

## நான்காண்டு நினைவு

தாய்க்காக:
22 - 01 - 1953



தமிழுக்காக:
14 - 02 - 1987

### வேலுப்பிள்ளை சிவனேந்திரன் (ரஞ்சன்)

நாட்டுக்கு நல்ல விதி அமைத்திடும்
நற்றலைவன் நின் தந்தை
நாட்டுக்குச் சுதந்திர
நற்பேறிற்கு விதியை
நாட்டிய பொறியியலறிஞ்ஞு
நற்பணி தொடங்கிய
நடுவழி சாதனை தவற
நீற்றுடல் விட்டனை ஐயநீர்
காட்டிய வீரம் காண்கின்ற
ஈழம் கட்டாயம் போற்றியே திரும்

(C/5756) உறவினன்

## நான்காண்டு நினைவு

தாய் மடியில்:
23 - 12 - 1956



தமிழீழ மண்ணில்:
14 - 02 - 1987

### லெப். கேணல். பொன்னம்மான் (அற்புதன்)

(செல்லப்பா யோகரத்தினம். குகன்)

எங்கள் தாய் மண்ணை என்றும் சுதந்திரமாய்க் கங்கைக் கரைக் குகனைக் கரைசேர்க்க, கடமைதனில் எங்கே மறைந்தாய்! எம்தமிழர் நெஞ்சங்களில் இங்கிதமாய் வாழ்ந்து தமிழ் ஈழம் மலரும் பொன்னம்மானே!

(C/5755)

## LIONS CLUB OF VADDUKODDAI
## அதிஷ்ட லாபச் சீட்டு இழுப்பு

மேற்படி சீட்டிழுப்பு 17-02-1991 ஞாயிறு காலை 10-00 மணிக்கு சித்தன்கேணியில் உள்ள லயன்ஸ் மண்டபத்தில் நடைபெறும். பரிசு சீட்டுக்கள் வாங்கியோர் இந்நிகழ்ச்சியில் பங்குபற்றுமாறு அழைக்கப்படுகின்றனர்.

(15815) துரைசிங்கம் ராஜ
தலைவர்.

யா/ கனகரத்தினம்
மத்திய மகாவித்தியாலயம்

## ஆண்டு 6 பிரவேசப்பரீட்சை

16-2-91 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெறவுள்ள மேற்படி பரீட்சைக்கான அனுமதி அட்டையை இதுவரை பெறாதவர்கள் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

(15838) மு. இராமலிங்கம்
அதிபர்

## 4 ஆம் ஆண்டு இதய அஞ்சலி



தாயின் மடியில்:
17 - 02 - 1971

ஆண்டவன் அகால மறிப்பு:
14 - 02 - 1987

திதி: 1 3 1991

### செல்வி
### ப. திவ்வியசொருபினி
(செல்லம் - திவ்யா)

கைதடி வடக்கு பத்மநாதன் - பரிமளாதேவி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், உடுவில் மகளிர் கல்லூரி 1987 ஆம் ஆண்டு 10 ஆம் வகுப்பு மாணவி.

''எங்கள் அன்பின் செல்வமே! அழகுதெழுதாச் சித்திரமே! ஆடிவரும் பொன்விளக்கே! நீவிர் எங்களை விட்டு மறைந்து நான்கு ஆண்டுகள் சென்றாலும் நின் நினைவு எங்கள் மனதை விட்டு மறைந்திடுமா! நின் ஆன்மா சாந்திபெற இன்றும், என்றும் அந்த ஆண்டவனையும், மற்றும் சகல தெய்வங்களையும் பிரார்த்திக்கின்றோம்''.

நின் பிரிவால் ஆறாத்துயருறும்!

தந்தை, தாய், தங்கைகள் அனித்தா, ஜீவகி, பெரு பத்மநாதன் (அப்பப்பா), பேரன், பேத்தி, மாமன்மார், மாமிமார், சித்தன்னைமார்கள், ஆசை அப்பா பராசக்தி (பரா இந்திஸ்), ப. பாலச்சந்திரன் சித்தப்பா, பா பாலேந்திரன் (இந்தி), குஞ்சப்பா (ஜேர்மனி) மற்றும் சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார், நண்பிகள்.

மாணாசி வளவு,
கைதடி தெற்கு,
கைதடி. (15832)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
30 - 01 - 1949



உதிர்வு:
10 - 03 - 1986

திதி:
14 - 02 - 1991

### பரமசாமி கருணானந்தன்
(தொழில் நுட்பவியலாளர் பன்குளம்)

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

837, நாவலர் வீதி,
அரியாலை. (15821)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## செஞ்சிலுவை உதவி

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஈராக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, மனிதாபிமான அடிப்படையில் உணவு மற்றும் மருந்து வகைகளை நிவாரணமாக, உதவியாக வழங்குகிறது; அதே போன்று, யுத்தத்தால் பெரும் பாதிப்புக்குள்ளான ஈழத் தமிழ் மக்களுக்கு ஏன் வழங்கக் கூடாது?

அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில் உள்ள தடைகள் குறித்து யாழ். செயலகத்தில் நடைபெற்ற உயரதிகாரிகள் மாநாட்டில் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது.

அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவிக்காமல் ஈழத் தமிழ் மக்கள் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையின் சூழ்நிலையில் யாழ் உயரதிகாரிகள் கூட்டத்தில் எழுப்பப்பட்டிருக்கும் கேள்வி நியாயமானதே!

தமிழ்ப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்குத் தேவைப்படும் உணவு, மருந்து வகைகளில் பத்துப் பதினைந்து சதவீதத்துக்கும் குறைந்த அளவே அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்றன. தனியார் வர்த்தகர்கள் உணவையோ அல்லது மருந்து வகைகளையோ தாராளமாகக் கொண்டு வர முடியாது. பாதுகாப்பு நிலைமையும், போக்குவரத்துச் சிரமமும் அதற்குச் சாதகமாக இல்லை. முக்கியமான உணவு, மருந்து, பாவனை, விவசாயப்பொருள்களைக் கொழும்பில் இருந்து கொண்டு வர கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் அனுமதி வழங்குவதும் இல்லை.

மேற் கூறப்பட்ட விடயங்கள் அனைத்தும் வெறும் வார்த்தைகளோ எழுத்துகளோ அல்ல. வெளிப்படையான பரிசோதிக்கப் பார்க்கத் தேவையில்லாத தெளிந்த யதார்த்தமான, உண்மை. இங்கு பணிபுரியும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் அதிகாரிகள் நேரில் கண்டும், கேட்டும், விசாரித்தும் அறிந்தும் வைத்திருக்கும் முடிவான உண்மை.

எனவே குறிப்பிட்ட பகுதி மக்கள் உணவு இல்லாமல் பட்டினியாலும், மருந்து இல்லாமல் நோயாலும் மரணிக்கப் போவதைத் தடுப்பது சுயநலம் களைந்த முற்று முழுதான மனிதாபிமானப் பணியாகும்.

செஞ்சிலுவைச் சங்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் மனிதனின் உயிரைக் காக்கும் மனிதாபிமானப் பணி முதன்மை வாய்ந்தது.

இந்த மனிதாபிமானப் பணியை செஞ்சிலுவைச் சங்கம் அது நிறுவப்பட்ட 1863ம் ஆண்டு தொடக்கம் வழுவின்றிச் செய்து வருகிறது. "நாம் எல்லோரும் சகோதரர்கள்" என்ற ஹென்றி டுனன்டின் மகத்துவம் மிக்க இலட்சியத்துடன் பணியாற்றி வருகிறது.

யுத்தத்தினால் பாதிக்கப்படும் இடங்களில் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாது அவதியுறும் மக்களுக்கு உதவும் செஞ்சிலுவைச்சங்கத் தொண்டர்களின் சேவை உலகப் புகழ் பெற்றது; உயர்வானது.

எனவே உண்மையாகப் பாதிக்கப்பட்டு உதவி தேவைப்படும் (Deserving Victims) தமிழர்களுக்கு ஆபத்தில் உதவி செய்ய செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பின்னிற்காது என்று எதிர்பார்ப்போமாக.

# ஒரே நேரத்தில் இரு கப்பல்களை அனுப்பிவைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 14

"அத்தியாவசிய பொருள்களுக்கு நிலவும் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய ஒரே நேரத்தில் இரு கப்பல்களைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்"

மேற்கண்ட கோரிக்கை அரச திணைக்களத் தலைவர்களால் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் வருமாறு:-

★ கூடுதலான பொருள்கள் வந்து சேரத்தக்க வகையில் ஒரே நேரத்தில் இரு கப்பல்கள் பருத்தித்துறைக்குக் கொண்டு வரப்பட வேண்டும். அத்துடன் கப்பலுடன் இழுவைப்படகுகள் மூலம் எரிபொருள் கொண்டுவரப்பட வேண்டும்.

* முக்கிய மருந்து வகைகள் அனுப்புவதை அரசு தடைசெய்துள்ளதால், முக்கிய மருந்து வகைகளை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு கொண்டுவர வேண்டும்.

* தனியார் வைத்தியசாலை, பார்மசிகளுக்கு 10 சதவீதமான மருந்துவகைகளே கப்பல் மூலம் அனுப்பப்பட்டுள்ளன. கூடுதலான அளவு கொண்டுவரப்பட வேண்டும்.

★ பணப் புழக்கத்தை சீராக்க மாதாந்தம் ஏழு கோடி ரூபா அனுப்பப்பட வேண்டும்.

★ போதிய அளவு எரிபொருள் அனுப்பப்பட வேண்டும். (இ-3)

### கல்வி டிப்ளோமா நெறி

## வெளிமாவட்டங்களில் நடத்தும் முடிவுக்கு சங்கம் கண்டனம்

இலங்கை தேசிய கல்வி நிறுவனம் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நடத்தத் திட்டமிட்டிருந்த பட்டப்பின் கல்வி டிப்ளோமா நெறியை நிறுத்தி இப்பகுதி ஆசிரியர்களை வாராந்த வகுப்புகளுக்காக கொழும்பு அல்லது கண்டி அல்லது காலி மாவட்ட நிலையங்களில் சமூகம் அளிக்கச் சொல்வதை இலங்கைத் தமிழர் ஆசிரியர்கள் சங்கம் கண்டித்துள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர்கள் சங்கம் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் இந்த விவகாரத்தை கல்வி அமைச்சர், கல்வி ராஜாங்க அமைச்சர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

இந்த பயிற்சி நெறியை வடக்கு-கிழக்கில் ஆரம்பிக்க இருந்த நிலையங்களான யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகியவற்றில் நடத்த நடவடிக்கை எடுக்கும்படி இவர்களுக்கு அனுப்பப்பட்ட மகஜரில் கோரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்திருக்கும் கோப்பாய் மகளிர் கல்லூரியில் வார இறுதி நாட்களில் இப்பயிற்சி நெறியை நடத்தலாமெனவும், வவுனியா, மட்டக்களப்பு, திருமலை நகரங்களில் இப்பயிற்சியை நடத்துவதில் எவ்வித பிரச்சினையுமிருப்பதாக சங்கம் கருதவில்லையெனவும் மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## இறுதிவரை ஈராக் போரிடும்

அமெரிக்காவினதும் அதன் நேச நாடுகளினதும் ஆக்கிரமிப்பை எதிர்த்து இறுதிவரை போராடப் போவதாக ஜனாதிபதி சதாம் ஹுசைன் நேற்று அறிவித்துள்ளார்.

சோவியத் ஜனாதிபதி மிக்கெல் கோர்பசேவின் சிறப்புத் தூதுவர் ஈராக் சென்று துணைப் பிரதமரை பக்தாதில் வைத்துச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்திய பின்னர் ஜனாதிபதி சதாம் ஹுசைன் இந்த அறிவிப்பை விடுத்தார்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தைத் தோற்கடிக்க எத்தியாகத்தையும் செய்ய ஈராக்கிய படைகளும் மக்களும் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி ஹுசைன் கூறினார்.

அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு பாதுகாப்புச் சபை தீர்மானம் என்ற பெயரில் ஐ.நா.வும் துணை போயிருப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

ஈராக்கின் கட்டமைப்பை அழிப்பதுதான் அமெரிக்காவின் நோக்கம் என்று கூறிய ஜனாதிபதி ஹுசைன் இராணுவ நடவடிக்கைக்கு அனுமதி வழங்கும் ஐ.நா. பாதுகாப்புச் சபைத் தீர்மானத்தை ஆதரித்ததன் மூலம் சோவியத் யூனியனும் வளைகுடாப் போரில் சம்பந்தப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

அதேசமயம் வளைகுடா நெருக்கடிக்கு அமைதித்தீர்வு காண்பதற்கு சோவியத் யூனியனுடனும் ஏனைய நாடுகளுடனும் ஒத்துழைக்க ஈராக் தயாராக இருப்பதாக ஜனாதிபதி சதாம் ஹுசைன் தெரிவித்தார் என்று பக்தாத் வானொலி நேற்று அறிவித்தது.

## சோவியத் முயற்சி தோல்வி

சோவியத் ஜனாதிபதி மிக்கெயில் கோர்பசேவ் மேற்கொண்ட சமரச முயற்சி பலனளிக்காத நிலை ஏற்பட்டுள்ளதாக பக்தாத்தில் உள்ள சோவியத் தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சோவியத் துணைப்பிரதமர் பிரிமகோவ் ஜனாதிபதி சதாம் ஹுசைனைச் சந்தித்துப் பேசிய பின்னர் முன்சன் அபிப்பிராயம் வெளியிடப்பட்டது.

குவைத்தில் இருந்து தமது படைகளை விலக்கிக்கொள்ள சதாம் முன்வரும் அறிகுறிகளே பேச்சுக்களின் போது காணப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

## 30 பேர் கைது

கடந்த சில தினங்களாக தமிழ் நாட்டில் கைது செய்யப்பட்ட இலங்கைத் தமிழ்ப் போராளிகள் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்துள்ளது.

ஏற்கனவே சென்னையில் 14 பேரும் வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் 10 பேரும் பெரியார் மாவட்டம் மற்றும் செங்கை அண்ணா மாவட்டங்களில் தலா 2 பேரும் தஞ்சாவூரில் ஒருவருமாக இலங்கைத் தமிழ்ப் போராளிகள் கைது செய்யப்பட்டனர். தென் சென்னையில் நேற்று ஒருவர் கைது செய்யப்பட்டார். (அ-எ)

## பாடசாலையின் காணிப்பிரச்சினை தீர்ந்தது

யாழ்ப்பாணம், பெப். 14

நீண்டகாலமாக தீர்வு காணமுடியாதிருந்த கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயக் காணிப் பிரச்சினையை கொழும்புத்துறை இணக்க மன்றத்தினர் தீர்த்துவைத்தனர். மீளப் பெறப்பட்ட காணியில் தற்பொழுது மாணவர் விவசாயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். (இ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 14

நல்லூர் யாழ்ப்பாணம் உ.அ. பிரிவுகளுக்கு உட்பட்ட பயிலுநர் ஆசிரியர்களுக்காக தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தினால் நடாத்தப்படவிருக்கும் தலைமைத்துவப் பயிற்சி நெறி குறித்த கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறும். (இ)

# போராளிகளின் தாயாயிருந்து வழி நடத்தியவர் பொன்னம்மான்

ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டத்தில் முக்கிய பங்காற்றிய லெப். கேணல் பொன்னம்மானிடம் பயிற்சி பெற்ற ஆயிரக்கணக்கான போராளிகளில் ஒருவர், அவரின் போராளி மாணவர் ஒருவர் —
பொன்னம்மானின் நான்காவது நினைவு தினத்தையொட்டி எழுதிய கட்டுரை இது.

காலங்காலமாக தமிழ் மக்கள் அடக்குமுறைக்கு உள்ளாகி, அடிமைகளாக இருந்த நேரம், பலர் தாங்கள் அடிமைகள் என்பதை உணராத நேரம் முதலில் ஆயுதம் ஏந்தியவர்களில் பொன்னம்மானும் ஒருவர். சுயநலவாத அரசியல்வாதிகளின் ஏமாற்றலுக்கு பலியாகிக் கொண்டிருந்த தமிழ் மக்களின் எழுச்சிக்கு, அவர்களின் விடுதலைக்கு ஆயுதப் போராட்டமே சரியானது என்பதை லெப்டினன்ட் கேணல் பொன்னம்மான் விளங்கிக் கொண்டார்.

தலைவர் பிரபாகரனைச் சந்தித்து, அவருடைய நன்மதிப்பைப் பெற்று விடுதலைப் புலிகளின் ஓர் உயர்ந்த போராளியாக உருவாகினார் பொன்னம்மான்.

எமது இயக்கத்தின் மூத்த உறுப்பினர். ஆயிரக்கணக்கான புலிகளை இந்த மண்ணுக்கு உருவாக்கித் தந்தவர். உயர்ந்த தோற்றம்; எந்நேரமும் சிறிய தாடி [illegible] திருக்கும் அழகான முகம்; எவரையும் கவர்ந்து [illegible] அன்பு நிறைந்த பேச்சு, இவை சேர்ந்தவர் தான் பொன்னம்மான்.

"அம்மான்" என்று போராளிகளை நாம் ஏன் மிக அதிகமாக விரும்பினோம்? உண்மைதான் அம்மான் இளம் போராளிகளுக்கு ஒரு தாயாக இருந்தார். அந்தப் போராளிகளின் வாழ்வில், முன்னேற்றத்தில் பூரணமாகக் கவனம் செலுத்தினார். அவர்களின் இன்பங்களில், துன்பங்களில் கலந்து அவர்களில் ஒருவராகவே வாழ்ந்தார்.

எங்களுக்குப் போராட்டத்தைப் பற்றி, போராட்ட வழிமுறைகளைப் பற்றி, நாம்



கள் சந்திக்கப் போகும் துன்ப துயரங்களைப் பற்றி கதை, கதையாகவே சொல்லித் தந்தவர் பொன்னம்மான்.

அம்மான் சொன்ன கதைகள் தான், பல போராளிகளை இந்த மண்ணை அளவு கடந்து நேசிக்கச் செய்தது. [illegible] களை உயிரையும் இந்த மண்ணுக்காக தரத் தயாராக்கியது.

நீண்ட காலமாக பயிற்சி முகாம்களிலேயே தங்கிவிட்ட பொன்னம்மான், தானும் எதிரானவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் நேரடியாக பங்குபற்றுவதற்காக தமிழீழத்திற்கு வந்தார். அந்த மண் அவரை வரவேற்றது.

நாவற்குழி இராணுவ முகாமை தாக்கி அழிப்பதற்காக திட்டமிடப்பட்டது. பொன்னம்மான் எல்லாவற்றையும் நேரடியாக நின்று செய்து கொண்டிருந்தார். ஆனால், துரதிர்ஷ்டவசமாக எமது வெடிமருந்து நிரப்பப்பட்ட வண்டி வெடித்து விட்டதால்.........!

பொன்னம்மான், மேஜர் கேடில்ஸ், கப்டன் வாசு, லெப். சித்தார்த்தன், 2வது லெப். பரன், சுவர், குமணன், தேவன், அக்பர், யோகேஸ், ரஞ்சன், மற்றும் பல பொது மக்களும்.........

அன்று தொடக்கம் பொன்னம்மானின் கருணை நிறைந்த முகத்தை நாம் காணவில்லை; அவர் தமிழீழத்தின் காற்றுடன் கலந்து விட்டார்.

இன்றும்—

காவல் அரண்களிலும், காட்டுப் பாதைகளிலும், தமிழீழத் தென்றல் எங்களை அரவணைக்கும், தடவும், உற்சாகப் படுத்தும் நேரங்களில் எல்லாம் நாம் பொன்னம்மானை நினைத்துக் கொள்வோம்.........

ஏனென்றால்......

அந்தத் தென்றலில் தான் எங்கள் அம்மானும் கலந்துள்ளார் என்பதால்.....! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலர் உணவு நிவாரண அட்டவணை

| பொருள்கள் | 1 அங்கத்தவர் எடை | ரூ. ச. | 2 அங்கத்தவர் எடை | ரூ. ச. | 3 அங்கத்தவர் எடை | ரூ. ச. | 4 அங்கத்தவர் எடை | ரூ. ச. | 5 அங்கத்தவர் எடை | ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அரிசி | 3 கி | 39.45 | 5 கி | 65.75 | 6 கி | 78.90 | 7 கி | 92.05 | 10 கி | 131.50 |
| மாவு | 1 கி | 12.25 | 2 கி | 24.50 | 2½ கி | 30.65 | 3 கி | 36.75 | 3 கி | 36.75 |
| சீனி | ½ கி | 12.90 | 1 கி | 25.75 | 1 கி | 25.75 | 1½ கி | 38.65 | 2 கி | 51.50 |
| பருப்பு | ¼ கி | 12.15 | ½ கி | 24.25 | ½ கி | 24.25 | ¾ கி | 36.40 | 1 கி | 48.50 |
| பால்மா | | | | | 1 | 40.40 | 1 | 40.40 | 1 | 40.40 |
| மண்ணெண்ணெய் | ¼ லீற் | 2.10 | ¼ லீற் | 2.10 | ¼ லீற் | 2.10 | ¼ லீற் | 2.10 | ¼ லீற் | 2.10 |
| மொத்தம் | | 78.85 | | 142.35 | | 202.05 | | 246.35 | | 310.75 |
| மீதி சில்லறைப் பொருள்கள் | | 5.15 | | 11.65 | | 7.95 | | 5.65 | | 4.25 |
| பெறுமதி | | 84.00 | | 154.00 | | 210.00 | | 252.00 | | 315.00 |

## இன்று தபால் விநியோகம்

யாழ்ப்பாணம், பெப். 14

கப்பலில் வந்த வெளியூர் தபால் பொதிகள் நேற்றுப் பருத்தித்துறையிலிருந்து யாழ். தபாலகத்திற்கு எடுத்து வரப்பட்டன.

தபால்கள் தரம்பிரிக்கப்பட்டு அநேகமாக இன்றே விநியோகிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-5)

### வடக்கு - கிழக்கில்

## சகஜநிலை இல்லையா? ஜனசக்தி வேண்டாம்!

கொழும்பு, பெப். 14

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சகஜநிலை நிலவாத பகுதிகளில் ஜனசக்தித் திட்டத்தைச் செயற்படுத்த வேண்டாம் என்று ஜனசக்தி ஆணையாளர் சுசில் சிறிவர்த்தனா அறிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் சகல அரசாங்க அதிபர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டிருப்பதாகவும் ஆணையாளர் சொன்னார்.

பிரச்சினைக்குரிய பகுதிகளில் சகஜநிலை திரும்பியதும் ஜனசக்தித் திட்டத்தை அமுல் நடத்தலாம் என்றும் ஆணையாளர் தெரிவித்தார். (ஓ-எ)

## ஒரு மாதத்தில் மட்டும் 384 பேருக்கு நாய்க்கடி

யாழ்ப்பாணம், பெப். 14

யாழ். மாவட்டத்தில் கடந்த மாதம் மட்டும் 384 பேர் நாய்க்கடிக்கு இலக்கானார்கள். அவர்களில் இருவர் விசர் நாய்க்கடியால் மரணமாகியுள்ளனர்.

இதேவேளை —

விசர் நாய்க்கடி தடுப்பூசிகள் யாழ். ஆஸ்பத்திரி மற்றும் சிவிநெச்சி, சாவகச்சேரி, பருத்தித்துறை, மானிப்பாய், சங்கானை ஆகிய வைத்தியசாலைகளில் உண்டு என்றும் —

நாய்க்கடிக்கு இலக்காவோர் மேற்படி ஆஸ்பத்திரிகளில் இலவசமாக தடுப்பூசிகளைப் ஏற்றிக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்படுகிறது (ஓ-18)

## இன்று

யாழ். மாவட்டத்திலுள்ள சகல ப. நோ. கூ. சங்க முகாமையாளர்கள் கலந்து கொள்ளும் கலந்துரையாடல் ஒன்று, இன்று பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். ப. நோ. கூ. சங்க அலுவலகத்தில் நடைபெறும் (ஓ)

## ஷெல்லுக்கு விவசாயி பலி

யாழ்ப்பாணம், பெப். 14

பலாலி முகாமிலிருந்து நேற்று மாலை 5.30 மணியளவில் ஏவிவிடப்பட்ட ஷெல் குண்டு அச்சுவேலி பத்தைமேனியில் தோட்டம் ஒன்றில் விழுந்து வெடித்ததில் தோட்டத்தில் மருந்து விசிறிக் கொண்டிருந்த சிவகுரு சிவரத்தினம் (வயது 39) என்ற விவசாயி உயிரிழந்தார்.

நீண்ட நேரமாக வீட்டுக்குத் திரும்பாத இவரைத் தேடி உறவினர்கள் நேற்றிரவு 8 மணியளவில் தோட்டத்திற்குச் சென்ற போது அங்கு அவர் சடலமாகக் கிடக்கக் காணப்பட்டார்.

## நவம்பர் ஒய்வூதியம்

யாழ்ப்பாணம், பெப். 14

யாழ். மாவட்ட ஒய்வூதியர்களுக்கான நவம்பர் மாதக் கொடுப்பனவு வழங்கப்பட இருக்கிறது.

சம்பந்தப் பட்டவர்களுக்கான வவுச்சர்கள் நேற்று செயலகத்தில் இருந்து அனுப்பப்பட்டன.

இந்தக் கொடுப்பனவுக்கான கட்டுநிதி கொழும்பில் இருந்து வராத போதும் செயலகத்திலுள்ள பணத்தில் இருந்து கொடுப்பனவு வழங்கப்படவிருக்கிறது. (ஓ-3)

## பல்கலை மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ் பல்கலைக்கழக அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த மாணவர்களுக்கான பொதுக்கூட்டம் ஒன்று, இன்று முற்பகல் 11 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெற இருக்கிறது

கூட்டத்தில் மாணவர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட இருப்பதாக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ஓ)

## நிவாரணம் கேட்கிறார்கள் ஒய்வூதியர்

யாழ்ப்பாணம், பெப். 14

"மாதாந்தம் ஒய்வூதியம் வழங்கப்படவேண்டும். இல்லையேல் உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவேண்டும்".

யாழ். மாவட்ட ஒய்வூதியர்கள் இவ்வாறு அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்தனர்.

நூற்றுக்கணக்கான ஒய்வூதியர்கள் நேற்று செயலகத்தில் கூடினார்கள்.

தமது பிரச்சினைகள் குறித்து அரச அதிபருடன் அவர்கள் கலந்துரையாடினார்கள்.

குறிப்பிட்ட மாதத்தில் ஒய்வூதியம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டால், உலர் உணவுப் பொருள்களை கடன் அடிப்படையிலாவது வழங்க வேண்டும் என்றும், பின்னர் ஒய்வூதியம் வழங்கப்படும் போது பணத்தை வசூலிக்கும்படியும் மற்றொரு கோரிக்கையும் விடுக்கப்பட்டது. [ஓ-3]

## கிழக்கில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட ஐந்து பொலீஸார் உயிரிழந்தனர்

பொலீஸாரிடமிருந்து 84 எஸ் ரக துப்பாக்கிகள் - 3, அதற்குரிய மகஸின்கள் - 3, 5.56 ரவைகள் - 75 என்பன தங்களால் கைப்பற்றப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன

மணலாற்றில்

மணலாறு பகுதியில் விடுதலைப்புலிகளின் நிலக்கண்ணி வெடியில் இராணுவ வாகனம் ஒன்று சிக்கிச் சிதறியது. அதி[illegible] இராணுவத்[illegible] [illegible] உயிரிழந்தார்கள். (உ-எ)

## முல்லைத்தீவில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வான் தாக்குதலும் இடம் பெற்றன. இதனால் கட்டடங்கள் பல சேதமடைந்தன.

நேற்று நடந்த மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் மேஜர் ஜோன்ஸன் (திருமலை) வீரமரணமடைந்தார்.

மேஜர் ஜோன்ஸன் குறித்து விடுதலைப்புலிகள் விடுத்த குறிப்பில் —

"1984 ஆம் ஆண்டில் இயக்கத்தில் தன்னை முழுமையாக இணைத்துக்கொண்ட ஜோன்ஸன், 1986 வரை திருமலையிலும் பின்னர் வன்னியிலும் செயற்பட்டு வந்தார். அம்பில், செம்மலைப் பகுதியின் அரசியற் பொறுப்பாளராக இருந்த அவர், பின்னர் இந்திய படையுடனான பல மோதல்களில் முன்னின்று போராடியவர். காட்டு வளங்களைப் பாதுகாக்கும்பொறுப்பும் இவரிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது.

கொக்காவில், மாங்குளம் முகாம்கள் தாக்கப்பட்ட தாக்குதல்களிலும் மேஜர் ஜோன்ஸன் முக்கிய பங்கு வகித்தவர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

நேற்று முன்தினம் முல்லைத்தீவில் இடம்பெற்ற மோதலில் —

சுரேஷ் (சிலாவத்தை—முல்லைத்தீவு) அமரராஜ் (தீர்த்தக்கரை— முல்லைத்தீவு) ஆகிய இருவரும் வீரமரணமடைந்தனர். [உ-15]

## நெலுக்குளம்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா நகரிலிருந்து வந்த மற்றொரு இராணுவ அணி இந்த அணியுடன் இணைந்து கொண்டதாகவும் —

நேற்று பிற்பகல் 2 மணி முதல் மூன்று மணி வரை தாண்டிக்குளம் பகுதியில் வைத்து இந்த இரு அணியுடனும் விடுதலைப் புலிகள் கடும் சண்டையில் ஈடுபட்டதாகவும் மற்றொரு செய்தி தெரிவித்தது.

இராணுவ அணி தாண்டிக்குளம் பகுதியை விட்டு அகன்றதும் கண்டி வீதி வழியாக வவுனியாவுக்கான போக்குவரத்து சீரடைந்ததாக மற்றொரு செய்தி தெரிவித்தது. ஆனால் அதனை ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை. (உ)


## கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய் பதவிகள் வெற்றிடம்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு அனுபவமுள்ள சுத்திகரிப்பு தொழிலாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 01-03 91 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். வயதெல்லை 30 - 50. முன் அனுபவம், தகைமை ஆகிய வைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.

கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய்.

(14919)

**Short Hand Typing Classes**

**Pitman - London - Exam**

**ஆரம்பம்: 18 - 02 - 1991**

விபரங்களுக்கு:

**North Ceylon Technical Institute**

14, St Peter's Lane,
Hospital Road,
Jaffna.

[கி-5761]


## மரண அறிவித்தல்கள்

### வல்லிபுரம் அழகரத்தினம்

(இளைப்பாறிய பிரதம பொறியியலாளர் தபால் தந்தி திணைக்களம்)

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த வல்லிபுரம் அழகரத்தினம் 13-2-91இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற குருநாதர் வல்லிபுரம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் மூத்த புதல்வரும், சிவகாமசுந்தரியின் கணவரும், காலஞ்சென்ற பொன்னம்மா, காலஞ்சென்ற அருளம்மா, காலஞ்சென்ற செல்லம்மா, தில்லைநாதர், மீனாட்சி, தங்கம்மாவின் சகோதரரும், காலஞ்சென்ற நடராசா, காலஞ்சென்ற திருமேனி, க. கனகலிங்கம், ராஜேஸ்வரி, நா. கனகலிங்கம், த. தியாகராசாவின் மைத்துனரும் ஆவார். ஈமக்கிரியைகள் 14-2-91 வியாழக்கிழமை காலை பத்து மணியளவில் உரும்பிராயில் நடைபெறும்.

தகவல்:
நா. கனகலிங்கம்

(15830)

### சிவகுரு சிவரத்தினம்

பத்தைமேனி வயிரவர் கோவிலடியைச் சேர்ந்த சிவகுரு சிவரத்தினம் நேற்று மாலை அகால மரணமானார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று பகல் 2 மணிக்கு நடைபெறும்.

தகவல்;
வே. செல்லத்துரை
(மைத்துனர்)

பத்தைமேனி,
அச்சுவேலி.

(5440)

## OBITUARY

**MISS. E. I. KELK**

**Retired Vice - Principal Chundikuli Girls' College**

We regret to record the death of Miss KELK former Vice - Principal Chundikuli Girls' College The funeral took place in U. K. on the 13th of February 1991.

PRINCIPAL
Chundikuli Girls' College.

(C 5757)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 102/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 14 - 02 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org